
உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI

மலர் 18 | மன்மத ஆடி - புரட்டாதி | 2015 - July - September | இதழ் 4-5-6






ரூபா. 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்விதழ் வெளிவர அனுசரணை**
**திரு. ந. கருணை ஆனந்தன் அவர்கள்**

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | செந்தண்மை பூண்டொழுகிய அந்தணர் திலகம் | 02 |
| 02 | திருவாதவூரடிகள் புராணம் | 05 |
| 03 | அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் | 07 |
| 04 | சுந்தர மூர்த்தி நாயனார் புராணம் | 15 |
| 05 | இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை | 17 |
| 06 | வாரியாரின் ஒரு வரிப் பதில் | 20 |
| 07 | சைவத்தில் தத்துவம் | 21 |
| 08 | விதிதனை வெல்லும் சாதனை கோளறுபதிகம் | 22 |
| 09 | திருவாவடுதுறை பயிற்சி மையத்தினர் போற்றித் துதித்து வணங்கிய சிவாலயங்கள் | 25 |
| 10 | புராணவித்தகர் திரு.மு.தியாகராசா அவர்கள் | 31 |
| 11 | திருமந்திர விளக்கம் | 32 |
| 12 | ஆரடா நீ? | 33 |
| 13 | அருளாளர்களின் அனுபவ ஞானம் | 36 |
| 14 | நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள் | 39 |


**சைவநீதி முத்திங்கள் இதழ்**
பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 50.00 ஆண்டொன்றுக்கு ரூபா 300.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**

C. Navaneethakumar
No. 4A, 1St Lane, Ratmalana.
Tel : 077 9008286



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# சைவநீதி

மலர் 19 மன்மத ஆடி, ஆவணி, புரட்டாதி

சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 4,5,6

**தொடக்குனர் :**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்
**திரு. செ. நவநீதகுமார்**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
- கொழும்பு

No. 4A, 1St Lane,
Ratmalana.
Tel : 077 9008286

## போதைப் பொருளிலிருந்து மக்களை மீட்டெடுப்போம் வாரீர்

ஒழுக்கம் மிக்க வாழ்வு இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கும். இவ்வொழுக்கத்திற்கு தடையாயுள்ளவை கொலை, களவு, கள், காமம், குருநிந்தை ஆகிய பஞ்சமாபாதங்களாம். இவை விலக்கப்பட வேண்டியவை.

இன்று நிகழும் சமூகவிரோதச் செயல்களுக்குக் காரணமாயுள்ளன போதைப்பொருள் பாவனை எனப்பலரும் கூறுவதைக் காணக்கூடியதாயுள்ளது. பஞ்சமாபாதகத்தில் நடுவேயுள்ள கள் என்பது தான் போதைப்பொருள். இது இக் காலத்தில் பல வடிவத்தில் உள்ளது மதுவும், புகைத்தலும் போதை தரும் பொருள்களுமாக உள்ளது. போதைப் பொருட் பாவனையே அனைத்துப் பாதகச் செயல்களுக் கும் மூலகாரணமாயுள்ளது.

வளரும் சமுதாயம் இழி செயல்களில் ஈடுபடாது இருக்க நற்போதனைகள் அவசியம் வேண்டும். சமூகத்தில் உள்ள பெரியவர், ஆசிரியர், பெற்றோர், சமயப் பெரியார்கள் என அனைத்துப் பெரியோர்களுக்கும் இதிற்பங்குண்டு. இளம் சமூகத்தை ஒழுக்கம் மிக்கவராக உருவாக்கும் கடமை அனைவருக்கும் உண்டு. போதைப்பொருள் பாவனையை விலக்குவதனால் ஏனைய சமூகவிரோதச் செயல்களில் இருந்து விடுபட வாய்ப்புண்டு.

ஆன்மிகவழியில் இளைஞரை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்வை ஒழுக்கம்மிக்க பிறர் மதிக்கக்கூடிய நிலைக்கு வழிப்படுத்தமுடியும். சைவ ஆசார ஒழுக்க நெறியிலே சிறுவயதிலிருந்து வாழப்பழகினால் சமூகவிரோதச் செயலில் இருந்து விடுபட முடியும்.

போதைப்பொருட்கள் தன்னையும் அழித்துத் தன்னைச் சார்ந்துள்ள சமூகத்தையும் அழித்து வாழ்வைச் சிதைத்து விடும் என்பதை எல்லோர்க்கும் உணர்த்துவது அறிவுடையோர் கடமை என்பதையுணர்ந்து இப்பணியில் எல்லோரும் பங்காளிகள் ஆவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தண்மை பூண்டொழுகிய அந்தணர் திலகம் ஈழத்துச் சிதம்பரம் கலாநிதி க. வைத்தீஸ்வரக்குருக்கள்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் பிரதமகுருவாக விளங்கிய ச.க.கணபதீஸ்வரக்குருக்கள் சிவயோக சுந்தராம்பாள் தம்பதிகளின் அருந்தவ மகனாக 1916.09.22 இல் பிறந்தார். 2015.04.25 வரை 99வயது நிறைவு காண வாழ்வாங்கு வாழ்ந்தவர். தந்தை போல் தானும் ஈழத்துச் சிதம்பரப் பிரதமகுருவாகவும், ஆசிரியராகவும் வாழ்ந்து தெய்வீகப் பணி சிறந்தவர்.

தமிழ் இலக்கண இலக்கியம், சைவசித்தாந்தம், சைவத்திருமுறை கள், புராணங்கள், வேதஆகமங்கள், உபநிடதங்களை ஐயம்திரிபறக் கற்றவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையாளராய் அளப்பரும் பணிசெய்தவர்.

தான் ஓதியுணர்ந்து தெளிந்த அறிவை இந்த மாநிலம் பயனுறச் செய்யவேண்டும் என்ற இலட்சிய தாகம் கொண்டு சைவம் வளர்க்க ஒருசபையும், தமிழ் வளர்க்க ஒருசபையும் நிறுவினார். தனது 24ஆவது இளமைவயதில் ஈழத்துச் சிதம்பரத்தைத் தளமாகக் கொண்டு **1940இல் மணிவாசகர் சபையை நிறுவினார்.** சைவம் தழைக்க வேண்டிய அத்தனை பணிகளையும் அதன்மூலம் செய்து செய்வித்தார்.

அவரால் நிறுவப்பட்ட மணிவாசகர் சபை அவர்முன்னாலே வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழாவையும் நடத்தி மலர்களையும் வெளியிடத் தோன்றாத் துணையாய் இருந்து கண்டுகளித்தார். இச்சபைமூலம் எண்ணில்லா நூல் வெளியீடுகள், மலர் வெளியீடுகள், ஆண்டுதோறும் திருவாசகவிழா, அதில் பேரறிஞர்களின் , அருளாளர்களின் பேருரைகள் என இடையீடற்ற பணிகள் மலர்ந்தன.

தமிழை வளர்க்க வேண்டுமென **1960இல் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை** நிறுவினார். அதன் மூலம் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் முதல், ஆசிரியர்கள், வளர்ந்தவர்கள் யாவரும் தூய தமிழைக் கற்று அவர்கள் தாமே தமிழ் வளர்க்க உந்து சக்தியாகத் திகழ்ந்தார். மாணவர்களுக்குரிய தமிழ்ப் பயிற்சி நூல்கள் முதல் அரும்பெரும் பழைய நூல்களைப் பதிப்பித்துப் பயன் கொள்ள வைத்தார். தனது தந்தையார் முதலான முன்னோர்கள் ஏட்டில் எழுதி வைத்த நூல்களை அச்சில் கொணர்ந்த பெருமையும் இவருக்கு உண்டு.

குருக்கள் அவர்கள் பிறப்பாலும் அந்தணர், செந்தண்மையாலும் அந்தணர். அவருடைய நெஞ்சம் அருள்நெஞ்சம். அதனால் அவருடைய உள்ளத்தில் உதித்த சிந்தனைகள் அனைத்தும் செயல் வடிவம் பெற்றன.

ஈழத்துச் சிதம்பரத்தைக் களமாகக் கொண்டு சைவத் தமிழ்ப் பணிகள் செய்த குருக்கள் அவர்கள் அத்தலத்தின் மேல் தல புராணங்கள் எழவேண்டுமென எண்ணினார். சுந்தரேஸ்வரர் மீதும், ஐயனார் மீதும் இரண்டு தலபுராணங்கள் எழுந்தன. புலவர்மணி சோ. இளமுருகனார் மூலம் ஈழத்துச் சிதம்பரபராணத்தைப் பாடுவித்தார். அவருடைய துணைவியார் பண்டிதை பரமேஸ்வரி மூலம் உரையும் எழுதுவித்து வெளியிட்டார்.

பண்டிதமணி க. மயில்வாகனனார் மூலம் ஐயனார் புராணத்தைப் பாடுவித்தார். சைவப்புலவர் சு.செல்லத்துரை மூலம் உரையும் எழுதுவித்து வெளியிட்டார். இவ்விதமாக அவர் வெளியிட்ட நூல்கள் பலப்பல.

குருக்களுடைய மிக உயர்ந்தபண்பு தமிழ் வளர்ப்போர் சைவம் வளர்ப்போர் எவராயிருந்தாலும், அவர் எங்கு இருந்தாலும் அவர்களுக்கு உதவியும் ஊக்குவிப்பும் வழங்கித் தமிழும் சைவமும் வளர்ந்தோங்க வழிகாட்டுவதாகும். எல்லார் மீதும் அருள் உள்ளங்கொண்டு பண்புடன் உரையாடி அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்து ஆலோசனை வழங்கும் அவரது இயல்பு வியக்கத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, திருவாவடுதுறை ஆதீனம் கொழும்பில் சைவசித்தாந்த, சைவத்திருமுறைப் பயிற்சி மையங்களைத் தொடங்கிய போது (2010) அவர் மிக உற்சாகத்துடன் வரவேற்று, வேண்டிய அரும் பெரும் நூல்களையும் அவ்வவ்போது தந்து அடிக்கடி ஆலோசனைகளையும் கூறுவார். சைவசித்தாந்தத்தை வாழ்வியலோடு பொருத்திக் கற்பிக்க வேண்டும் என்று சொல்லி அதற்கு உரிய வழிவகைகளையும் சொல்வார்.

அவருடைய நூல் தேட்டம் வியக்கத்தக்கது. தூரநோக்கு உடையது. ஏடுகள், பழையநூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைத்துணுக்குகள் முதலான முக்கியமானவை அனைத்தையும் பாதுகாத்து வைத்து அவற்றைத் தனக்கோ பிறர்க்கோ தேவைப் பட்டபோது எடுத்துக்கொடுத்துப் பயன் கொள்ளவைக்கும் பரோபகாரம் வியக்கத்தக்கது.

தன் பின்னாலும் அவை பயன் தரவேண்டுமெனத் தந்தையார் பெயரில் நூலகம் நிறுவிப் பாதுகாத்த பெருமைக்குரியவர் இவர்.

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு.செல்லத்துரை**

திருச்சிற்றம்பலம்
சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பேறிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையோம்
நன்றி இல்நெறியில் அழுந்திய நாடும்
நல்தமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்
திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பெரியபுராணம் - 2562

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாதவூரடிகள் புராணம்

புராணம் என்பது பழமையானது என்னும் கருத்தினைத் தரும். புராணம் சமய வாழ்வின் முக்கியத்துவத்தினை இலகுவாக எடுத்துக் காட்டுவதாகும். சமய உண்மைகளை அப்படியே கூறும் நூல்கள் சாத்திரங்கள் எனப்படும். சாத்திரம் உணர்த்தும் தத்துவப் பொருள்களை உணர்ந்து கொள்வதற்கு சமய வாழ்க்கையில் ஈடுபடுதல் வேண்டும். புராணங்கள், சமயசாத்திரங்கள் கூறும் உண்மைகளைக் கதைகள் மூலம் இலகுவாக அறியக்கூடியவாறு கூறும் இயல்பின. புராணங்கள் மிகவும் சுவையான கதைகளை பாடல்களில் வழங்குவன. புராணங்களுக்கு உரை சொல்லும் போது பதவுரை, பொழிப்புரை, விசேட உரை, அலங்காரஉரை, விருத்தி உரை, தத்துவக் கருத்து என ஆறு வகையாக உரை சொல்வது சம்பிரதாயம் ஆகும். சொல்லோடு பொருள் கூறுவது பதவுரை எனப்படும்.

புராண படன சம்பிராயத்தில் புராணம் பயில்பவர்கள் முதன்முதலில் உரை சொல்லப்பழகுவது திருவாதவூரடிகள் புராணத்திற்காகும். வாதவூரர் என்பது மணிவாசகருடைய இயற்பெயர், திருவாதவூரடிகள் புராணம் கடவுள் மாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் சிவஞானமுனிவருடைய சீடராகிய கச்சியப்ப முனிவரின் மாணாக்கர் ஆவர். இந்நூல் 18ஆம் நூற்றாண்டில் எழுந்தது என அறியப்படு கின்றது.

மார்கழி மாதத்தில் திருவாதிரையைக்கு முதற் பத்து நாட்களில் திருவெம்பாவைப் பூசையினை அடுத்து இப்புராணத்தைப் படிக்கும் மரபு உண்டு. திருவெம்பாவைப்பூசை சிவனுக்குரிய விசேட பூசைகளுளொன்று. சிவன்மீது திருவாசகம் பாடிச் சிதம்பரத்தில் இறைவனோடு கலந்த பெருமை பெற்றவர் மாணிக்கவாசகர். ஆதலின் அவருடைய வரலாறு கூறும் புராணத்தை திருவெம் பாவைப் பூசைக்காலத்தில் படிக்கும் மரபு ஏற்பட்டது போலும். திருவாதவூரடிகள் புராணம் மணிவாசகருடைய வரலாற்றை கூறுவது மாத்திரமன்றி சிவபெருமானின் திருவருள் திறத்தையும் அடியவர் களை ஆட்கொள்ளும் பாங்கினையும் விளக்குவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதவூரடிகள் புராணம் உயர்வு நவிற்சியின்றி சிற்றின்பச் சுவை கலத்தலின்றி இயல்பு நவிற்சியாக மணிவாசகரது வரலாற்றையும் இறைவன் அவரை ஆட்கொண்ட திறத்தையும் விரிவாகப் பேசும் குறிக்கோளை இனிதாக நிறைவேற்றி அமைகிறது. இப்புராணம் மந்திரிச்சருக்கம், திருப்பெருந்துறைச்சருக்கம், குதிரையிட்ட சருக்கம் மண்சுமந்த சருக்கம், திருவம்பலச்சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடிபெற்ற சருக்கம் ஆகிய பகுதிகளை உடையதாகி 546 பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது.

திருவாதவூரடிகள் ஆமாத்தியப் பிராமண குலத்தில் தோன்றி சகல கலைகளும் கற்று அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக நியமனம் பெற்ற செய்தி மந்திரச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. திருவாதவூரடிகள் அவதாரம் செய்த சிறப்பை புலப்படுத்தும் பாடலொன்று இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

**தவமெனும் பெரிய வித்துள் தங்கியே அங்குரித்துப்**
**பவமெனும் பங்கம் நீக்கி, பயிலருள் குருத்துண்டாகி**
**அவமெனும் களைகள் நீங்க ஆக்குவோன் அருளால் உண்மைச்**
**சிவமெனும் விளைவுண்டாக வளர்ந்ததுச் தெய்வச்சாலி**

திருவாதவூரடிகள் புராணத்தைப் பற்றிச் சில தகவல்கள் இவை.

**திருமதி. நா. பராசக்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## திருப்பாண்டிக்கொடுமுடியில் பாடிய
## நமச்சிவாயத்திருப்பதிகம்

7ஆம் திருமுறை பதிக எண் 48

பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

1. மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நா நமச்சி வாயவே.

**கற்றவர் தொழுதேத்துஞ்சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா**
கற்றவர்கள் வணங்கித்துதிக்கின்ற புகழையுடைய கறையூரில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடி எனும் கோயிலில் எழுந்தருளி இருக்கின்ற நல்லதவ வடிவினனே.

**மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்**
எனக்கு வேறுதுணை இல்லையாகும்படி உனது திருவடியையே துணையாக மனதில் துணியப் பெற்றேன்.

**பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்**
அவ்வாறு துணியப்பெற்ற பின்பே நான் மனிதனாகப் பிறந்தவன் ஆனேன். அதுவன்றி இனியொரு பிறப்பிற் சென்று பிறவாத தன்மையும் எனைவந்து அடையப் பெற்றேன்.

**உனைநான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே**
இனி உன்னை நான் மறந்தாலும் எனதுநா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இட்ட னும்மடி யேத்து வார்இகழ்ந்
திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாளிவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லும் நா நமச்சி வாயவே.

**கிளர்புனற் காவிரி வட்டவாசிகை கொண்டடி தொழு**
மிக்குவருகின்ற நீரையுடைய காவிரியாறு வளைவாக மேலால் விளங்க இடப்படும் மாலையைக் கொணர்ந்து உன்திருவடியை வணங்கித் துதிக்கின்ற
**பாண்டிக் கொடுமுடி நட்டவா**
திருப்பாண்டிக் கொடுமுடி எனும் தலத்தில் இருக்கின்ற தோழமை கொண்டவனே
**இட்டன் உன்னடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள்**
உன்னால் விரும்பப் பெற்றவனாகிய நான், உன் திருவடியைத் துதிக்கின்ற அடியவர்களால் இவன் நிலையில்லாத மனத்தை உடையவன் என்று இகழப்பட்ட நாள்களும்
**மறந்திட்டநாள்**
அவ்வாறு அவர்கள் இகழ்வதற்கு ஏதுவாக நான் உன்னை மறந்துவிட்ட நாள்களும் ஆகிய இவைகளை
**கெட்டநாள் இவைஎன்றலாற் கருதேன்**
அடியேன் அழிந்தநாள் என்று கருதுவதன்றி வேறாகக் கருதமாட்டேன்
**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**
ஆதலின் உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

3. ஓவு நாளுணர் வழியும் நாளுயிர்
போகும் நாளுயர் பாடைமேல்
காவு நாளிவை என்ற லாற்கரு
தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோதி பாண்டிக் கொடுமுடி**
**நாவ லாஉனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நா நமச்சி வாயவே.**

**பரஞ்சோதி**
மேலான ஒளியாய் உள்ளவனே
**கிளர்புனற்காவிரி பாவுதண்புனல் வந்திழிபாண்டிக் கொடுமுடி நாவலா**
மிக்குவருகின்ற நிறையுடைய காவிரியாற்றினது பரந்த வெள்ளம் வந்து பாய்கின்ற திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நாவன்மை உடையவனே
**ஓவுநாள்**
அடியேன் உன்னை நினையா தொழிந்த நாள்களை
**உணர்வு அழியும் நாள்**
என் உணர்வு அழிந்த நாள்களும்
**உயிர் போகும் நாள்**
உயிர் போன நாள்களும்
**உயர்பாடைமேல் காவுநாள் இவை என்றலாற்கருதேன்**
உயரத் தோன்றும் பாடைமேல் வைத்துக் காவப்படும் நாள்களும் என்னும் இவைகளாகக் கருதுதல் அன்றி வேறு நாள்களாகக் கருதமாட்டேன்.
**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**
ஆதலின் உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

**4. எல்லை யில்புகழ் எம்பி ரானெந்தை**
**தம்பி ரானென்பொன் மாமணி**
**கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி**
**காவி ரியதன் வாய்க்கரை**
**நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை**
**யூரிற் பாண்டிக் கொடுமுடி**
**வல்ல வாவுனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நாநமச்சி வாயவே.**

**எல்லையில் புகழ் எம்பிரான்**
எல்லையில்லாத புகழையுடைய எம்பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்தை தம்பிரான்**
என் தந்தைக்கும் தலைவனே
**என்பொன்**
என் பொன்போல்பவனே
**மாமணிக்கல்லை உந்தி வளம் பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை**
மாணிக்கக் கற்களை தள்ளிவந்து எவ்விடத்திலும் செல்வத்தை மிகுதியாகச் சொரிந்து பாய்கின்ற காவிரியாற்றினது கரையிலே
**நல்லவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி வல்லவா**
நல்லவர்களால் வணங்கித் துதிக்கப்படுகின்ற புகழையுடைய திருக்கறையூரில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடிக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாம் வல்லவனே.
**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**
உன்னை நான் மறந்தாலும், என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

5. **அஞ்சி னார்க்கரண் ஆதி யென்றடி**
**யேனும் நான்மிக அஞ்சினேன்**
**அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்**
**நல்கி னாய்க்கழி கின்றதென்**
**பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்**
**தாடு பாண்டிக் கொடுமுடி**
**நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நாநமச்சி வாயவே.**

**பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்தாடும்**
பஞ்சுபோன்ற மென்மையான அடிகளையுடைய பாவைபோலும் மகளிர் காவிரித்துறைக்கண் மூழ்கி விளையாடுகின்ற
**பாண்டிக் கொடுமுடி நஞ்சணி கண்ட**
திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளி இருக்கின்ற நஞ்சணிந்த கண்டத்தையுடையவனே
**அஞ்சி னார்க்கரண் ஆதி யென்று**
அச்சமுற்று வந்து அடைந்தவர்களுக்கு நீ பாதுகாப்பாவாய் என்று அறிந்து.
**அடியேனும் நான்மிக அஞ்சினேன் அஞ்ச லென்றடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் மிக அச்சமுற்று வந்து உன்னை யடைந்தேன் அதனையறிந்து நீ அவ்வண்ணமே அஞ்சேல் என்று சொல்லி அடித்தொண்டனாகிய எனக்கு அருள்புரிந்தாய்.

**அழிகின்றதென்**

அதனால் உனக்குக் கெடுக்கின்றது ஒன்றின்மையைக் கண்டேன்

**நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**

உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

**6. ஏடு வானிளந் திங்கள் சூடினை**
**என்பின் கொல்புலித் தோலின்மேல்**
**ஆடு பாம்பத ரைக்க சைத்த**
**அழக னேயந்தண் காவிரிப்**
**பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்**
**சோதி பாண்டிக் கொடுமுடி**
**சேட னேயுனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நா நமச்சி வாயவே.**

**கொல்புலித் தோலின்மேல் ஆடு பாம்பது அரைக்கசைத்த ஐயனே**

கொல்லும் புலியினது தோலின் மேல் ஆடுகின்ற பாம்பை அரையிலே கட்டியுள்ள அழகனே

**அந்தண் காவிரிப்பாடு தண்புனல் வந்திழிபரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி சேடனே**

ஒலிக்கின்ற குளிர்ந்த நீர் வந்து பாய்கின்ற திருப்பாண்டிக் கொடுமுடி எனும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற மேலான ஒளியாய் உள்ளவனே, பெருமையுடையவனே.

**ஏடுவான் இளந்திங்கள் சூடினை என்பின்**

பூவிதழ் போன்ற இளந்திங்களை முடியிற் சூடினாய் அதன்பின் சான்று சொல்லப்படுவது என்.

**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**

உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந்**
**தேன்வி னைகளும் விண்டன**
**நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற**
**நின்ற காவிரிக் கோட்டிடைக்**
**குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்**
**தாடு பாண்டிக் கொடுமுடி**
**விரும்ப னேயுனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நா நமச்சி வாயவே.**

**குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந்தாடும்**
தென்னங்குரும்பை போலும் மெல்லிய கொங்கைகளையுடைய கன்னிப் பெண்கள் மூழ்கி விளையாடுகின்ற
**நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெறநின்ற காவிரிக் கோட்டிடை**
வளப்பமான சோலைகள் நெருங்கிச் சூழ்ந்து அழகுண்டாக நிற்கின்ற காவிரியாற்றின் கரையின்கண்
**பாண்டிக் கொடுமுடி விரும்பனே**
திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலில் எழுந்தருளி இருக்கின்ற விரும்பப்படுபவனே
**விரும்பி நின்மலர்ப் பாதமேநினைந்தேன் வினைகளும் விண்டன**
உனது மலர் போலும் திருவடிகளை விரும்பி நினைந்தேன் அதனால் எனது நீங்குதற்கரிய வினைகளும் நீங்கின.
**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**
இனி உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

8. **செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந்**
**தீயெ ழச்சிலை கோலினாய்**
**வம்பு லாங்குழ லாளைப் பாகம**
**மர்ந்து காவிரிக் கோட்டிடைக்**
**கொம்பின் மேற்குயில் கூவ மாமயி**
**லாடு பாண்டிக் கொடுமுடி**
**நம்ப னேயுனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நாநமச்சி வாயவே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செம்பொ னேர்சடை யாய்**
செம்பொன் போலும் சடையை உடையவனே
**திரிபுரந்தீயெ ழச்சிலை கோலினாய்**
திரிபுரத்தில் தீயுண்டாகும்படி வில்லை வளைத்தவனே
**வம்பு லாங்குழ லாளைப் பாகமமர்ந்து**
மணம் வீசுகின்ற கூந்தலையுடைய இறைவியை ஒரு பாகத்தில் விரும்பி வைத்து
**காவிரிக் கோட்டிடைக்கொம்பின் மேற்குயில் கூவ மாமயிலாடு பாண்டிக் கொடுமுடி நம்பனே**
காவிரியாற்றின் கரையிலுள்ள சோலைகளில் கிளைகளின் மேல் குயில்கள்கூவச் சிறந்தமயில்கள் ஆடுகின்ற இயற்கை அழகுமிகுந்த பாண்டிக்கொடுமுடி எனும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்பனே
**உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**
உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

9. **சார ணன்தந்தை எம்பி ரானெந்தை**
**தம்பிரா னென்பொன்மா மணியென்று**
**பேரெ ணாயிர கோடி தேவர்**
**பிதற்றி நின்று பிரிகிலார்**
**நார ணன்பிர மன்றொ ழுங்கறை**
**யூரிற் பாண்டிக் கொடுமுடிக்**
**கார ணாவுனை நான்ம றக்கினுஞ்**
**சொல்லும் நா நமச்சி வாயவே.**

**நாரணன் பிரமன்றொழுங்கறையூரிற் பாண்டிக்கொடுமுடிக் காரணா**
திருமாலும் பிரமனும் வணங்குகின்ற கறையூரில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடி எனும் கோயிலில் எழுந்தருளி இருக்கின்ற முதல்வனே
**பேரெணாயிர கோடி தேவர்**
அளவற்ற கோடிக்கணக்கான தேவர்கள்
**சாரணன் தந்தை எம்பிரானெந்தை தம்பிரானென்பொன்மாமணி யென்று பிதற்றி நின்று பிரிகிலார்**
எமக்குப் புகலிடமானவன், எம் தந்தை, எம் தலைவன், எம் தந்தைக்குத் தலைவன், எங்கள் பொன், எங்கள் மணி என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி உன் பெயர்களையும் சொல்லிப் பிதற்றி நின்று உன்னைப் பணியமாட்டார்கள்.

**காரணா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே**

பெரியோனாகிய உன்னை நான் மறந்தாலும் என்நா உனது திருப்பெயராகிய நமச்சிவாய என்பதனை இடையறாது சொல்லும்.

**10. கோணி யபிறை சூடியைக் கறை**
**யூரிற் பாண்டிக் கொடுமுடி**
**பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப்**
**பித்த னைப்பிறப் பில்லியைப்**
**பாணு லாவரி வண்ட றைகொன்றைத்**
**தார னைப்படப் பாம்பரை**
**நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை**
**சொல்லு வார்க்கில்லை துன்பமே.**

**கோணி யபிறை சூடியை**

வளைந்த பிறையைச் சூடியவனும்

**கறையூரிற் பாண்டிக் கொடுமுடிபேணிய பெருமானை**

திருக்கறையூரில் இருக்கின்ற பாண்டிக் கொடுமுடி என்னும் கோயிலை விரும்பி எழுந்தருளி இருப்பவனும்

**பிஞ்ஞகப்பித்த னைப்பிறப் பில்லியை**

தலைக்கோலம் உடையவனும் பிறப்பு இறப்பு இல்லாதவனும்

**பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தாரனை**

இசையோடு உலாவுகின்ற வரிகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் கொன்றைப் பூமாலையை அணிந்தவனும்

**படப் பாம்பரைநாணனை**

படத்தையுடைய பாம்பாகிய அரைஞாணை உடையவனும் ஆகிய பெருமானை

**தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லை துன்பமே**

அவன் தொண்டனாகிய நம்பியாரூரன் பாடிய இப் பாடல்களைப் பாடுபவர்க்குத் துன்பம் இல்லையாம்.

திருச்சிற்றம்பலம்

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணத் தொடர் ..........

## சுந்தர மூர்த்தி நாயனார் புராணம்

சுந்தரர் அங்கே சென்ற போது, கலிக்காமர் இறந்து கிடப்பதைக் கண்டு "நானும் இவர்போலே இறந்து போவேன்" என உடைவாளை எடுத்தார். உடனே பரமசிவனின் திருவருளினால் கலிக்காமர் உயிர்த்தெழுந்து, சுந்தரரை நமஸ்கரித்தார். பின்பு இருவரும் ஒருவரையொருவர் தழுவி அதிக நட்புள்ளவர்களானார்கள். பின்பு சுந்தரமூர்த்தி நாயனார், கலிக்காம நாயனாருடன் திருப்புன் கூருக் குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்து, "அந்தணாளனுன் அடைக் கலம்" எனும் திருப்பதிகம்பாடிச் சில நாட்கள் தங்கியபின் திருவாரூரை அடைந்தார்.

அப்பொழுது சேரமண்டலத்தில் கொடுங்கோளூரிலிருந்த சேரமான் பெருமாணாயனார், சுந்தரமூர்த்தி நாயனாருடைய பக்திமகிமையைப் பரமசிவத்தினால் அறிந்து அவரைத் தரிசிப்பதற்காகத் திருவாரூரை யடைந்தார். இருவரும் மிகுந்த நட்பினால் அளவளாவி மகிழ்ந்தனர். சிவனடியார்கள் சுந்தரரை "சேரமான் தோழர்" என்றும் அழைத்தனர். திருவாரூர்ப் பெருமானைத் தரிசித்துவிட்டு, சேரமானைச் சுந்தரர் பரவையார் மாளிகைக்கு அழைத்துச் சென்று விருந்து செய்து சில நாட்கள் அங்கு தங்கியிருந்தார்கள்.

சில நாட்கள் சென்றபின் சேரமான் பெருமாள் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கித் தம்முடைய ஊருக்கு எழுந்தருளி வரும்படி பிரார்த்திக்க, சுந்தரரும் அதற்கு இசைந்து இருவரும் திருக்கண்டியூரை அடைந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டு புறப்பட்டனர். அப்போது வடகரையிலுள்ள திருவையாறு எதிரே தோன்ற சேரமான் பெருமாள் சுந்தரரைப் பார்த்து, "சுவாமீ அடியேன் மனம் திருவையாற்றை வணங்க விரும்புகிறது நாங்கள் இந்த நதியைக் கடந்து போய் வணங்குவோம்" என்றார். அக்காவிரி நதி இருகரைகளையும் அழித்து ஓடங்கள் செல்லாதபடி பெருகுதலைக் கண்டு சுந்தரமூர்த்தி நாயனார் "பரவும் பரிசொன்றறியேனான்" என்ற திருப்பதிகம் தொடங்கி திருப்பாட்டினிறுதி தோறும் "ஐயாறுடைய வடிகளோ" என்று சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துப் பாடினார். உடனே காவிரி நதியின் வெள்ளம் விலகி நடுவே வழிகாட்டியதும் இருவரும் ஆனந்தம் பொங்க ஐயாறப்பனை மனம் உருகி வழிபட்டனர்.

பின்பு பல தலங்களை வழிபட்டுக் கொடுங்கோளூரையடைந்தனர். சேரமான் பெருமாள் சுந்தரர் பெருமானை திருவஞ்சைக்களம் எனும் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு சுந்தரர் "முடிப்பது கங்கை" எனும் பதிகம் பாடிப்போற்றினார். சேரமான் பெருமாள், சுந்தரரைப் பட்டத்து யானையின் மேல் அமரச் செய்து, தாம் அவர் பின்னே அமர்ந்து சுந்தரருக்கு இருகைகளாலும் வெண்சாமரை வீசிக் கொண்டு தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். சுந்தரர் பெருமானைத் தம் அரியணையில் அமரச் செய்து அவரது திருவடிகளுக்கு மலர்தூவி அர்ச்சித்தார். பின்பு சுந்தரர் பெருமானுக்கு திருவாரூர் இறைவனைக் காணும் விருப்பம் உண்டாயிற்று.

திருவாரூர் பெருமான் நினைவு மிகுந்து சுந்தரர் பெருமான் "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" எனும் பதிகம் பாடிச் சேரமானுக்கு உணர்த்தி அவரிடமிருந்து விடைபெற்றார்.

சேரமான் பெருமாள் சுந்தரரைப் பிரியமனமின்றிப் பெரிதும் கலங்கினார். தம் மாளிகையில் உள்ள பெரும்பொருள்களைப் பொதிசெய்து ஆட்களின் மேல் ஏற்றுவித்து நெடுந்தூரம் சென்று வழியனுப்பினர். அங்ஙனம் செல்லும் போது இறைவன் ஏவல் வண்ணம் பூதகணங்கள் வேடுவராகிச் சென்று, சுந்தரரின் பொருள்களைக் கவர்ந்து சென்றனர். அந்நிலையில் சுந்தரர் "கொடுகு வெஞ்சிலை" எனும் திருப்பதிகத்தைப் பாடியபோது, உடனே இறைவன் அருளால் வேடுவர்கள், வழிப்பறி செய்த பொருட்களை அத்திருக்கோவிலின் வாயிலில் கொண்டு வந்து குவித்தார்கள். சுந்தரர் பொருள்களை எடுத்துக் கொண்டு திருவாரூர் சென்றடைந்தார்.

தொடரும்......

**சித்தாந்தரத்தினம்**
**திருமதி. பத்மினி இராஜேந்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி.........

# இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை

## சிதம்பரம்

2012.01.30 திகதி அதிகாலையில் எழுந்து சிதம்பரம் சென்றோம். கோயில் என்று சிறப்புப் பெயர் பெற்ற இடம். தில்லை மரங்கள் நிறைய இருந்ததால் தில்லைவனம் எனப் பெயர் ஏற்பட்டது. தற்போது தில்லை மரம் இல்லை. பஞ்சபூதத்தலங்களில் ஆகாயத்தலம். சிதம்பரத்தில் ஒரேயளவான உயரங்கொண்ட ஏழு நிலைகளைக் கொண்ட நான்கு இராஜ கோபுரங்கள் உண்டு. கிழக்குக் கோபுர வழியாக மாணிக்க வாசகரும், தெற்குக் கோபுர வாசல் வழியாக சம்பந்தரும், மேற்குக் கோபுர வாசல் வழியாக அப்பரும், வடக்குக் கோபுர வாசல் வழியாக சுந்தரரும் சென்று சிற்சபையில் நடமாடும் நடராஜரை வழிபட்டுள்ளனர். மூலவர் - மூலட்டானேசுவரர், இறைவி – உமையம்மையார், சிற்சபையில் இறைவன் - நடராஜர், இறைவி - சிவகாமசுந்தரி, தலவிருட்சம் - தில்லை, தீர்த்தங்கள் பத்து - சிவகங்கை, பாமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்ததீர்த்தம், நாகச்சேரி, பிரம்ம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமடு, குய்யதீர்த்தம், திருப்பாற்கடல்.

இக்கோவிலில் சிற்றம்பலம், பொன்னம்பலம் (கனகசபை) பேரம்பலம், நிருத்தசபை, ராசசபை என பஞ்ச சபைகள் உண்டு. சிற்றம்பலத்தில் இறைவன் திருநடனம் புரிய சிவகாமியம்மை இடையறாது கண்டு மகிழ்கிறார். சிற்றம்பலத்தினுள்ளே செல்ல 5 படிகள் உண்டு. இவை பஞ்சாட்சரப்படிகள் எனப்படும். இப்படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் இருக்கின்றன. சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான திருக்களிற்றுப்படியார் இப்படியில் வைக்கப்பட்டு யானையால் இறைவனின் திருவடியில் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பொன்னம்பலம் சிற்றம்பலத்திற்கு முன் உள்ளது. அபிடேகம் நடக்கும் இடம். இரண்டு சபைகளின் முகடும் பொன்னால் வேயப் பட்டுள்ளன. பேரம்பலத்தில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளியிருக்கின் றனர். நிருத்த சபைதான் இறைவன் ஊர்த்துவதாண்டவம் செய்தரு ளிய இடம். சிவன், காளி, விஷ்ணு மூவரும் உள்ள மூர்த்தம் ஊர்த்துவதாண்டவர். விஷ்ணு தாளம் போட வலது காலைத்தூக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளியோடு ஆடிய தாண்டவம். ராசசபை என்பது ஆயிரங்கால் மண்டபம். இங்கு ஆனி, மார்கழி மாதங்களில் உத்தர, திருவாதிரை நட்சத்திர நாட்களில் விடியற்காலையில் அபிடேகம் நடக்கும்.

சமயகுரவர் நால்வராலும் மிக அதிகமானோராலும் பாடல் பெற்ற தலம். தேவாரத்தில் 11 திருப்பதிகங்களும், திருவாசகத்தில் 25 திருப்பதிகங்களும் இத்தலத்தின் மீது பாடப்பட்டுள்ளன. மாணிக்க வாசகர் புத்தரை வாதில் வென்று, ஊமைப்பெண்ணைப் பேசுவித்த தலம். தில்லைவாழ் அந்தணர் திருவாசகத்தின் பொருள் கேட்க, மணிவாசகர் கூத்தப்பெருமானைக் காட்டி, அவரோடு ஒன்றாகிய தலம். (கைகாட்டி தன்னுருவம் காட்டாமல்------ பாலுடன் மேவிய நீராயினார்) ஏறாது நின்ற கொடியை, 'கொடிக்கவி' பாடி உமாபதிசிவாசாரியார் ஏறவைத்த தலம். ஓடாது நின்ற தேரை "திருப்பல்லாண்டு" பாடி சேந்தனார் ஓடவைத்த தலமும் இது.

சேக்கிழார் பாடிய பெரியபுராணம் அரங்கேற்றப்பட்ட திருத்தலம் இது. உபமன்யுவுக்காக சிவபெருமான் இத்திருத்தலத்துக்குத் தான் பாற்கடலை வரவழைத்தார். தைமாதம், குருவாரம், பூசநட்சத்திரமும் பூரணையும் கூடிய நன்னாளில் வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் காண நடராஜப்பெருமான் ஆனந்தத் தாண்டவம் ஆடினார்.

இங்கு சிதம்பரரகசியம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சிற்சபையில் சபாநாயகரின் வலதுபக்கம் திரைபோடப்பட்ட நிலையில் சிறு வாயில் உள்ளது. திரை அகற்றப் பெற்று ஆராத்தி காட்டப்படும் போது திருவுருவம் எதுவும் தெரியாமல் தங்கத்தினால் ஆன வில்வதள மாலை ஒன்று மட்டும் தொங்கவிடப்பட்ட நிலையில் தெரியும். இதன் அர்த்தம் இறைவன் அருவமாக ஆகாயவெளியில் உள்ளார் என்பதாகும்.

தெற்கு முகமாக உள்ள நடராஜர் சந்நிதியையும், கிழக்கு முகமாக உள்ள கோவிந்தராஜப் பெருமான் சந்நிதியையும் ஒரே இடத்தில் நின்று வழிபடலாம். இது இத்தலத்தின் தனிச்சிறப்பு. ஆதாரத் தலங்களில் இருதயதலமாக விளங்குவது இது. தரிசிக்க முக்தி தரும் தலம் இது. இக்கோயிலுள்ள நாட்டியச் சிற்பங்கள் மிகச் சிறப்பானவை.

இங்கு தினமும் 6 காலப்பூசை நடக்கிறது. நடராஜப்பெருமானுக்கு சித்திரைத்திருவோணம், ஆனிஉத்தரம், ஆவணி பூர்வபட்ச சதுர்த்தசி, புரட்டாதி பூர்வபட்ச சதுர்த்தசி, மார்கழி திருவாதிரை, மாசி பூர்வபட்ச சதுர்த்தசி ஆகிய 6 நாட்கள் விசேட அபிடேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்கின்றது. ஆனியிலும், மார்கழியிலும் 10 நாட்கள் கொடியேறி திருவிழா நடக்கின்றது.

நடராஜர் வீற்றிருக்கும் பொன்னம்பலக் கூரையில் உள்ள (21,600) இருபத்தோர் ஆயிரத்து அறுநூறு ஓடுகள் (தங்கத்தால் ஆனவை) மனிதன் ஒரு நாளில் விடும் மூச்சுக்காற்றின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. கூரை இணைக்க பயன்படுத்தப்பட்ட (72,000) எழுபத்திரண்டாயிரம் தங்க ஆணிகள் மனிதனின் சுவாச ஜீவ நாடிகளின் எண்ணிக்கையை உணர்த்துகின்றன. பொன்னம்பலத்தில் உள்ள 64 கைம்மரங்கள் 64 கலைகளையும் 9 தங்கக் கலசங்கள் நவசக்திகளையும் குறிக்கின்றன. கனகசபையில் உள்ள 18 தூண்களும் பதினெண் புராணங்களையும், 5 வெள்ளிப் படிகளும் 5 எழுத்துக்களையும், வெள்ளிப்பலகணிகள் 96 உம், 96 தத்துவங்களை உணர்த்துவன.

தொடரும்......

**சித்தாந்தரத்தினம்**
**திருமதி. கேசினி கோணேஸ்வரன்**

**அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 2015ஆம் ஆண்டு நடத்திய**
**சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

1) திருமதி. இந்திராணி பொன்னுத்துரை – கொழும்பு 06.
2) திரு. சிவனேசராசா சிவராஜா – கல்லடி, மட்டக்களப்பு
3) திருமதி. நவரட்னம்மா வெள்ளைச்சாமி – கண்டி
4) திருமதி. கணேசலிங்கம் நாகபூஷணி – கொழும்பு 06.
5) திரு. அப்புத்துரை சிவரூபன் - மானிப்பாய், யாழ்ப்பாணம்.
6) திருமதி. மாயழகு சந்திராதேவி – மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி.........

## வாரியாரின் ஒரு வரிப் பதில்

118) எவன் நஷ்டமடைவான்?
**கர்வமுள்ளவன்**

119) எவனை நம்பக்கூடாது?
**எப்பொழுதும் பொய் சொல்பவனை**

120) பொய் எப்பொழுது பாபமல்ல?
**பிறரைக் காக்கச் சொல்லும்போது**

121) எது தருமம்?
**நமது வம்சத்தில் பிறந்த பெரியோர்களில் தினசரி கடமைகளை மேற்கொண்டவர்கள் கடைப்பிடித்த தருமம்**

122) சாதுவுக்குப் பலம் எது?
**தெய்வம்**

123) சாது யார்?
**எப்போதும் சந்துஷ்டியுடன் (மகிழ்வுடன்) இருப்பவன், அழாதவன்.**

124) தெய்வம் எது?
**நீ செய்த நல்ல காரியம்**

125) நல்வினை உடையவன் யார்?
**நல்லவர்களால் விரும்பப்படுகிறவன்.**

126) இல்லறத்தில் நண்பன் யார்?
**மனைவி**

127) இல்லறத்தான் யார்?
**வேள்விகளைச் செய்பவன்**

128) வேள்வி என்பது எது?
**செய்ய வேண்டியவன என்று வேதத்தால் விதிக்கப்பட்டு நமக்கு சிரேயஸ்சை (புகழை) எது தருகிறதோ அது.**

129) கர்மானுஷ்டங்கள் எவனுக்குப் பலிக்கும்?
**ஒழுக்கமுள்ளவனாகவும், விருப்பமுள்ளவனாகவும் இருப்பதுடன் வேதத்தில் பரம நம்பிக்கையுள்ளவனுக்கு.**

130) எவன் இருக்கும் போதே இறந்தவன்?
**அன்றாடம் செய்ய வேண்டிய தருமங்களைச் செய்யாதவன்.**

131) எவன் தன்யன்? (செல்வம் படைத்தவன் (அ) பாக்கியசாலி)
**துறவி**

132) எவன் பூசிக்கப்படுபவன்?
**பண்டிதன். (படித்துச் சாதுவாய் இருப்பவன்)**

133) யாரைச் சேவிக்க வேண்டும்?
**வள்ளலை**

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தில் தத்துவம்

தத்துவங்கள் முப்பத்தாறு என்று சொல்வர்
சுத்தமாயா தத்துவங்கள் ஐந்து ஆகும்
தத்துவமாம் **சிவம்சத்தி சாதாக் கியம்**
**ஈசுவரம் சுத்தவித்தை** என்ப தாகும்
இத்தரையில் அசுத்தமாய தத்துவ மேழாம்
அவைகால **நியதிகலை அராகம் வித்தை**
புத்திமிகு **புருடனுடன் மாயை** என்னும்
பான்மையுடன் விளங்கிடுமே அசுத்த மாயை

பிரகிருதி மாயாவின் தத்து வங்கள்
இருபத்து நான்கெனவே மொழிந்தார் முன்னே
பிரமாணம் என்னவெனில் புரியச் சொன்னால்
**மனம்புத்தி அகங்காரம் சித்த** மென்று
உருவான கரணங்கள் நான்கே யாகும்
ஞானேந்தி ரியமென்று ஐந்தும் உண்டாம்
திருவான **மெய்வாய்கண் மூக்குச் செவியும்**
ஐந்தாகும் என்றெனவே அறிவீர் இங்கே

உருவான **கைகால்வாய்** என்ப தோடு
**எருவாயும் கருவாயும்** கன்மேந் திரியம்
கருவாக ஐந்தென்று அறிதல் வேண்டும்
**சுவையொளி ஊறுஓசை நாற்ற** மென
வருமைந்தும் தன்மாத்திரை யாகக் கொள்வீர்
**மண்ணோடு நீர்நெருப்பு காற்றும் விண்ணும்**
திருத்தமுடன் இவையாவும் பஞ்ச பூதம்
என்பதோடு தத்துவங்கள் முப்பத் தாறாம்

சுத்தமாயா தத்துவத்தில் இறைவன் தானே
லயபோக அதிகார மேனி யோடு
நித்தந்தான் ஐந்தொழில்கள் இயற்று கின்றான்
லயத்தினிலே **சிவம்சத்தி** யாக நிற்பன்
சத்தான போகத்தில் **சதாசிவ** னுமாகி
அதிகார நிலைதன்னில் **அயனாய் மாலாய்**
சித்தனவன் **உருத்திரனாய் மகேச** னாகி
ஐந்தொழிலும் ஆற்றுகிறான் உயிர்கட் காக!

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**குறிஞ்சிநாடன் கி. வெள்ளைச்சாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிதனை வெல்லும் சாதனை கோளறுபதிகம்

வேதாரணியத்தில் திருமறைக்காடு எனும் சிவத்தலத்தின் திருக் கதவம் வேதங்களால் மூடப்பட்டிருந்தது. அப்பர் பெருமகனாரும் சம்பந்தப் பிள்ளையும் தாம் அற்புதப் பதிகங்கள் பாடித் திருக்கதவம் திறக்கவும் பின் மூடவும் அருள் பாலித்தனர். திருமறைக்காட்டீசர் ஆலய வளாகத்தில் அமைந்த திருமடத்தில் எழுந்தருளினார்கள். அவ்வேளை பாண்டிமாதேவி மங்கயர்க்கரசியாரும் முதன்மை மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் ஞானக்குழந்தையைப் பணிந்து பாண்டி நாட்டில் சமணத்தைச் சாய்த்து சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்கு நற்றமிழ் வல்ல ஞானக் குழந்தை பாண்டிநாட்டுக்கு எழுந்தருள வேண்டும் எனத் தமது தூதின் நோக்கத்தைக் கூறி நின்றனர். ஞானமுனிவனும் உடன்பட்டார். சமணர்கள் தம் கொடுமைகளுக்கு ஆட்பட்ட அப்பர், சம்பந்தரை நாள், கோள்களின் நிலை சரியல்ல எனக் கூறித் தடுக்கின்றார்.

இவ்விடம் சற்று சிந்திக்க வைக்கின்றது. 'நற்றுணையாவது நமச்சிவாயவே' எனப் பாடி தம்மை பிணைத்த கல்லினைத் தெப்பமாக மிதக்கப்பண்ணியவர். 'நமச்சிவாயவே நானறிவிச்சையும்' எனப் பாடி இறைவன் நாமமான நமச்சிவாயத்தின் பூரண அருள் கொண்டு சமணர்தம் கொடுமைகளை வென்ற தாண்டக வேந்தனார்க்கு ஞானபிள்ளையின் அருள் நிலை தெரியாதா என்ன? அவ்வாறு அப்பர் பெருமகனார் தடுத்ததன் காரணம் சம்பந்தப் பிள்ளையை உலகத்தவர் குழந்தை என எண்ணக் கூடாது என்பதற்காகவே. அதனால் அன்றோ எமக்கு விதிதனை வெல்லும் சாதனைக்கான 'கோளறு பதிகமும்' கிடைக்கப்பெற்றது.

ஞான உணர்வு மேலிட்ட பாலறாவாயர் தம் முணர்வால் சகலதை யும் உணர்ந்தார். சிவனடியார்தமை நாளும் கோளும் துன்பம் செய்யா எனக் கூறி வேயுறுதோழிபங்கன் எனும் தொடக்கமுடய பதிகத்தைப் பாடினார். அனுபவரீதியாக இப்பதிகத்தினை முற்றாக உணர்ந்த சிவஞானியர் இப்பதிகத்தைக் கோளறு பதிகம் என அழைத்தனர். இப்புவன வாழ்வில் எம் வினைப்பயனை, அதன்தன்மைக்கு ஏற்ப ஊட்டுபவை கோள்களும், நாள்களுமே. இப்பதிகத்தை பாராயணம் பண்ணிச் சாதனை (பயிற்சி) செய்யும் சிவனடியார்களை நாளும் கோளும் ஊறுவிளைவிக்காது என்பதால் இப்பதிகம் கோளறு பதிகம் எனப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக அமைப்பைப் பார்ப்போம் இப்பதிகத்தின் முதல்வரி தோறும் சிவனாரின் சுந்தரக்கோலம் போற்றப்படுகின்றது. இரண்டாம் வரிகள் தோறும் சிவனாரின் சிகை அழகைக் குறிப்பிட்டு அத்தகைய சிகை யோடு என்உள்ளம் புகுந்த அதனால் என குறிப்பிட்டு பின்னால் கோள்களால் வரக்கூடிய துன்பங்கள் யாவற்றையும் ஒவ்வொரு பாடலிலும் பதிவு செய்து. அவையாவும் அடியவர்களுக்கு நல்லதே விளைவிக்கும் எனப் பாடுகின்றார். ஏற்கனவே தனது முதற் பாடலான தோடுடைய செவியன் எனும் பதிகத்தில் இறைவனை உள்ளம் கவர்கள்வன் என குறிப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இறைவனின் சிகையை சிவாகமங்கள் ஞானம் எனக் குறிப்பிடுகின்றன. சைவ உலகால் சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் போற்றப்படுகின்ற திருமந்திரம் 23ஆம் பாடல் ஈற்றடியில் நுண்சிகை கேசமாம் நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம் .... என இறைவனின் கேசத்தைப் போற்றுகின்றது. ஞானம் எனக் கூறுகின்றது.

சிகை அழகோடு உளம் புகுந்த எனும் பதம் இறைவன் உயிரோடு இரண்டறக் கலந்து நிற்கின்ற அத்துவித சம்பந்தத்தைக் குறிக்கும். ஊனாகி உயிராகி உயிரின் உணர்வாகி என்றெல்லாம் திருவாசகம் பேசும். மேலும் "தந்தது நின்தன்னைக் கொண்டது என்தன்னை" என்றும் மணிவாசகர் இந்நிலையைக் கூறுவார். எனவே ஞானசம்பந்தர் இப் பதிகத்தை இறையோடு இரண்டறக் கலந்த இறைநிலையில் நின்று பாடினார் என்பது துணிபு.

இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு எனும் பதினொராம் பாடலில் இவ்வாறு கூறுகின்றார். "..........மறைஞான ஞான முனிவன் தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரை செய்....." இரு விடயங்கள் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்று இப்பதிகத்தைப் பாடியவர் யார். அவர் அவர் தம் நிலை மற்றையது யாருக்குப் பாடினார் என்பது.

பதிகத்தைப் பாடியவர் மறைஞான ஞான முனிவன் எனக் குறிப்பிடுகின்றார். இரண்டு ஞானங்கள் கூறப்படுகின்றன. ஒன்று நாம் ஏற்கனவே பார்த்தது போல் வேத நாயகனாகிய ஞானமுதல்வன் கலப்பில் ஞானசம்பந்தம் கொண்ட முனிவனாகிய இறைநிலை. மற்றயது சைவ நாற்பாதமாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் படிமுறையின் இறுதிநிலையான வேதம் கூறும் ஞானத்தின் ஞானநிலை. இது சீவன் முத்தர்க்கும் அப்பாற்பட்ட இறைநிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக சம்பந்தர் இப்பதிகத்தை இறைவனோடு ஐக்கியப்பட்ட இறை நிலையில் நின்று பாடுகின்றார் என்பது சம்பந்தர் வாக்கு.

யாருக்காகப் பாடுகின்றார்? சிவனடியார்களுக்காக பாடுகின்றார். பாடல் தோறும் கூறுகின்றார். அத்துவிதமாய் இறைவன் என் உயிரில் கலந்து நிற்க ஞான ஞான நிலையில் இறைவனாக முத்தி நிலையில் நிற்கின்றேன். எனை நாளும், கோளும் ஊறு செய்யாது. நாளும், கோளும் அடியாரைவந்து நலியாத வண்ணம் உரைசெய்கின்றேன் என்பார். அத்துவித நிலையில் நின்று பாடுதல் என்பது இறைவனே பாடுகின்றான் அல்லது சம்பந்தர் இறைவாக்காகப் பாடுகின்றார் என்பது பொருள். எனவே இப்பதிகம் தெய்வவாக்காகும்.

எமது வினைக்கு ஏற்ப எமக்கு பலன்களைத் தருபவை நாள்களான நட்சத்திரங்களும் தோள்களுமாகும் சிவனடியாரை வினைப்பயன் அண்டாத வண்ணம் பாடிய பாடல்கள் என்பதால் இப்பாடல்களைப் பாராயணம் பண்ணும் அடியார்கள் இருவினையொப்பு நிலையை அடைகின்றார்கள் என்பது துணிபு. காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி நாதனாகிய தன் நாமத்தை நமச்சிவாய என அவன் திருவடிகளைப் போற்றி, சிந்தையில் இருத்தி நன்னெறிக்கு இட்டுச் செல்லும் வேதநாயகன் நினைவோடு பாராயணம் பண்ணிச்சாதனை செய்வர். பேரின்பம் கிடைக்கும்.

யார் நமச்சிவாயவைப் பாராயணம் பண்ணலாம் எனவினாவின் ''கொல்வாரேனும் குணம் பல நன்மைகள் இல்லாரேனும்'' ஓதலாம் என்கிறார் சம்பந்தர். அதாவது கொல்லுதல் போன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்வோராக இருந்தாலும் அவர்கள் முன்கூறியதுபோல் நமச்சிவாயவைப் பாராயணம் பண்ணினால் இக் கொடுமைகளின் தீயபலன் அவர்களைச் சாராது என்கிறார் சம்பந்தர். அத்தகையோர் நமச்சிவாய கூறி சிவனடியாராகின்ற பொழுது பாதக தொழில்களை கைவிட்டு நன்னெறியடைவார்கள். என்கின்றார் மறைஞான ஞான முனிவன் அதனால்தான் வானில் அரசாள்வர் ஆணை நமதே'' என்கின்றார். எனவே சிவனடியாராய் வேடங்கொண்டு கோளறு பதிகம் சாதனை பண்ணி எமது விதிதனை வென்று மீண்டும் பிறவாநிலையை எய்துவோமாக.

**சித்தாந்தரத்தினம்**
**சரவணமுத்து கார்த்திகைக்குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவடுதுறை (கொழும்) பயிற்சி மையத்தினர் போற்றித் துதித்து வணங்கிய சிவாலயங்கள்

- ★ திருவாதவூரினிலே மாணிக்கவாசகர் அவதரித்த சிவதீர்த்தக்கரை தனிலே வேதநாயகி உடனுறையும் திருமறை நாதரே..... சிவசங்கரா
- ★ மதுரைமா நகரினிலே பொற்றாமரைக் குளக்கரையினிலே வெள்ளியம்பலத்தில் மீனாட்சியம்மன் உடனுறையும் சந்தியா தாண்டவம் ஆடிய சொக்கநாதரே ....... சிவசங்கரா
- ★ திருப்பெருந்துறை ஆவுடையார் பதியினிலே திருத்தமாம் பொய்கைக் கரைதனிலே யோகாம்பிகை உடன் உறையும் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட ஆத்மநாத சுவாமியே....... சிவசங்கரா
- ★ தஞ்சை பிரகதீஸ்வர பெரியகோவிலில் உலகமுழுதுடையாள் உடன் உறையும் பெரிய லிங்கத்திருமேனியாக பிரகாசிக்கும் பிரகதீஸ்வரரே ........ சிவசங்கரா
- ★ திருவையாறு பதியினிலே சூரியபுஷ்கரணி தீர்த்தக் கரைதனிலே தருமசம்வர்தினி உடன் உறையும் "ஐயாறப்பா" எதிர் ஒலி கேட்கும் ஐயாறப்பாவே ........... சிவசங்கரா
- ★ திருக்கண்டியூரினிலே குடமுருட்டி ஆற்றங்கரைதனிலே மங்களாம்பிகை உடன் உறைந்து பிரமன் தலைகொய்த பிரம்மன் சிரகண்டீசரே........ சிவசங்கரா
- ★ திருவிடைமருதூர் வீதியழகு மிளிரும் காருண்ய தீர்த்தக் கரைதனிலே சுந்தரகுஜாம்பிகை உடன்உறையும் பிரமஹத்தி தோசம் நீக்கிய மகாலிங்கேஸ்வரரே ......... சிவசங்கரா
- ★ திருவாரூரில் பிறக்க முத்தி கிடைக்கும் கமலாய குளத்தருகினிலே அல்லியங்கோதை உடன்உறையும் தேர் அழகு ஒளிக்கும் வன்மிகநாதரே........ சிவசங்கரா
- ★ திருக்கடவூர் அமிர்த தீர்த்தக்கரைதனிலே அபிராமி உடன் உறைந்து காலனை உதைத்த அமிர்தகடேஸ்வரரே...... சிவசங்கரா
- ★ திருவெண்காட்டு பதியினிலே சூரிய, சந்திர அக்கினி முக்குள தீர்த்தக் கரைதனிலே பிரமவித்தியாநாயகி உடன்உறையும் சுவேதா ரண்ய சுவாமியே........ சிவசங்கரா
- ★ சிதம்பரம் தரிசிக்க முத்தி தரும் ஆகாசபெருவெளியில் சிவகாமி அம்மை உடன்உறையும், கனகசபையில் ஆனந்த தாண்டவம் ஆடும் நடராசப் பெருமானே........ சிவசங்கரா
- ★ சீகாழி ஊழிக்காலத்திலும் அழியாத பதியினில் பிரம்ம தீர்த்தக் கரைதனிலே திருஞானசம்பந்தருக்குச் சிவஞானம் ஊட்டிய திருநிலைநாயகி உடன்உறையும் பிரமபுரீஸ்வரர் / தோணியப்பர்....... சிவசங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ திருப்புள்ளிருக்கு வேளூரில் சித்தாமிர்தத் தீர்த்தக்கரைதனிலே சடாயு, வேதம், முருகவேள் சூரியனார் போற்றி வணங்கிய தையல்நாயகி உடன்உறையும் வைத்தியநாதரே....... சிவசங்கரா
- ★ திருநல்லூர் சப்தசாகர தீர்த்தக்கரைதனிலே கல்யாணசுந்தரி உடன் உறையும் பஞ்சநிறம் மாறும் பஞ்சவர்ணேஸ்வரரே..... சிவசங்கரா
- ★ திருவண்ணாமலை நினைத்தாலே முத்திபெறும் பதியினிலே பிரம்மதீர்த்தக்கரைதனிலே உண்ணாமுலை அம்மை உடன் உறையும் சோதிப் பிளம்பாகத் தோன்றிய அண்ணாமலையாரே......... சிவசங்கரா
- ★ திருவெண்ணெய் நல்லூரிலே பெண்ணை நதிக்கரைதனிலே மங்களாம்பிகை உடன்உறையும், சுந்தரரை தடுத்தாட்கொண்ட கிருபாபுரிஸ்வரரே......... சிவசங்கரா
- ★ திருச்சக்தி முற்றத்தில் சூரியபுஸ்கரணி சூலதீர்த்தக் கரைதனிலே சோதிப் பிளம்பை முத்தம் கொடுத்த பெரியநாயகி உடன்உறையும் தழுவக்குழைந்த நாதரே....... சிவசங்கரா
- ★ திங்களூர் சந்திரபுஷ்கரணி தீர்த்தக்கரைதனிலே பெரியநாயகி உடன் உறையும், அப்பூதியடிகள் மகன் விடம் தீர்த்த கயிலை நாதரே...... சிவசங்கரா
- ★ உறையூர் பதியினிலே சிவதீர்த்தக்கரைதனிலே காந்தியம்மை உடன்உறையும் ஐம்பூதங்களை ஒன்றாக உள்ளடக்கிய பஞ்சவர் ணேஸ்வரரே...... சிவசங்கரா
- ★ திருபட்டீச்சரம் கோடி தீர்த்தக்கரைதனிலே ஸ்ரீ ஞானாம்பிகை உடன்உறையும் நந்தி விலகி காட்சி கொடுத்த தேனுபுரிஸ்வரரே....... சிவசங்கரா
- ★ திருச்சி தாயுமானவர் பதியினிலே பிரம்ம தீர்த்தக் கரைதனிலே மட்டுவார் குழலியம்மை உடன்உறையும் தாயாக இருந்து பிரசவம் பார்த்த தாயுமானவரே ....... சிவசங்கரா
- ★ திருவேடகம் பிரம தீர்த்தகரைதனிலே ஏலவார் குழலியம்மை உடன்உறையும் ஏடு எதிரேறவைத்த ஏடகநாதேஸ்வரரே. சிவசங்கரா
- ★ திருவலஞ்சுழி அரசிலாறு கரைதனிலே பிருகத்நாயகி உடன்உறையும் காவிரி வலம் வரும் வலஞ்சுழி நாதரே...... சிவசங்கரா
- ★ திருநாகேஸ்வர பதியினிலே சூரிய தீர்த்தக் கரைதனில் பிறையணி வாணுதவாள் உடன்உறையும், நாகநாதனுக்கு அருள்புரிந்து அர்த்தநாதீஸ்வரராக காட்சி தரும் நாகேஸ்வரரே..... சிவசங்கரா
- ★ திருவீழிமிழலை வீழிச்செடிகள் சூழ்ந்த விஷ்ணு தீர்த்தக் கரைதனிலே சுந்தரகுஜாம்பிகை உடன்உறையும், நேத்திரார்ப் பணேஸ்வரரே.... சிவசங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ திருவாவடுதுறை கோமுத்தீஸ்வரர் கோமுத்தி தீர்த்தக்கரை தனிலே ஒப்பிலா முலையம்மை உடன்உறையும் சம்பந்தரின் தந்தைக்கு வேள்விக்கு பொற்கிழி கொடுத்த மாசிலாமணிஸ்வரரே.... சிவசங்கரா
- ★ மயிலாடுதுறை ரிஷபதீர்த்த கரைதனிலே மயில் வடிவான அபயாம் பிகை உடன்உறையும், கௌரி தாண்டவம் ஆடிய மயூரநாதரே..... சிவசங்கரா
- ★ திருநல்லூர் பெருமணம் பதியினிலே பஞ்சாட்சர தீர்த்தக் கரை தனிலே வெண்ணீற்று உமைநங்கை உடன்உறையும் சிவலோகத் தியாகேசரே..... சிவசங்கரா
- ★ திருநாரையூரினிலே காருண்ய தீர்த்தக்கரைதனில் திரிபுரசுந்தரி உடன்உறையும் சவுந்தரேஸ்வரரே....... சிவசங்கரா
- ★ திருக்கோலக்கா தலத்தினிலே ஆனந்த தீர்த்தக் கரைதனிலே சம்பந் தருக்கு ஓசை கொடுத்த நாயகி உடன்உறையும், பொற்றாளம் கொடுத்த சப்தபுரிஸ்வரரே..... சிவசங்கரா
- ★ திருக்கானப்பேரூர் காளையார் பதியினில் கனகபுஷ்கரணி யானைமடு தீர்த்தக்கரைதனிலே சொர்ணவல்லி உடன்உறையும் சுந்தரருக்கு "யாம் இருப்பது கானப்பேரூர்" காட்சி கொடுத்து ஒரு லிங்கம் ஆயிரம் லிங்கமாக தோன்றும் காளிஸ்வரரே..... சிவசங்கரா
- ★ திருஉத்தரகோசமங்கைப் பதியினிலே அக்கினி தீர்த்தக் கரைதனில் மங்களாம்பிகை உடன்உறையும், பார்வதிதேவிக்கு வேதாமகங்க ளின் இரகசியத்தை உபதேசித்த மங்களேஸ் வரரே..... சிவசங்கரா
- ★ திருமறைக்காடு வேதாரணியத்திலே மணிகர்ணிகை தீர்த்தக்கரைதனிலே யாழைப் பழித்த மொழியம்மை உடன்உறையும் விளக்கு அழகில் காட்சி தரும் மறைக்காட்டீசுவரரே...... சிவசங்கரா
- ★ திரு இராமேஸ்வரம் புண்ணிய பதியினிலே அக்கினி தீர்த்த சமுத்திரத்தின் அருகில் பர்வதவர்த்தினி உடன்உறையும், இராமர் பூசித்த இராமநாத சுவாமியே...... சிவசங்கரா
- ★ தாணுமாலய சுசிந்திரம் பதியினிலே தாணுமாலய தீர்த்தக் கரை தனிலே அறம்வளர்த்த அம்பாள் உடன்உறையும், சிவன் பிரமன் திருமால் முப்பெரும் மூர்த்திகளாக வீற்றிருக்கும் தாணுமாலயப் பெருமானே....... சிவசங்கரா
- ★ திருநெல்வேலிப் பதியினிலே தாமிரபரணிக் கரைதனிலே காந்திமதி அம்மை உடன்உறையும் தாமிரசபையில் முனி தாண்டவம் ஆடும் நெல்லையப்பரே..... சிவசங்கரா
- ★ தென்திருவாலவாய் மதுரைப் பதியினிலே சிவதீர்த்தக் கரை தனிலே மதுரைக்கு வழிகாட்டிய படலமாக திகழும் மீனாட்சி அம்மை உடன்உறையும் திருநீற்றுப் பதிகம் பாடல் பெற்ற திருவாலவாயாரே...... சிவசங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* திருப்புனவாயில் இந்திரதீர்த்தக் கரைதனில் மொட்டைக் கோபுர வாயிலில் காளிரூபமாக காட்சி தரும் பெரியநாயகி உடன்உறையும் சிவஞானசபையில் நடமிடும் பழம்பதிநாதரே....... சிவசங்கரா
* திருவானைக்கா அப்புதலமாக விளங்கும் காவிரி தீர்த்தக்கரைதனில் அகிலாண்டேஸ்வரி உடன்உறையும் சுவாதிட்டதானமாக விளங்கும் யானைக்கு முத்தி கொடுத்த ஜம்புகேஸ் வரரே..... சிவசங்கரா
* திருவொற்றியூரினிலே பிரமதீர்த்தக் கரைதனிலே வடிவுடைநாயகி உடன்உறையும் சுந்தரர் சங்கிலியாருக்கு சபதம் செய்ய வைத்த புற்றிடம் கொண்டாரே........ சிவசங்கரா
* திருவலிதாயம் பரத்துவாச தீர்த்தகரைதனிலே கஜப்பிஷ்ட வடிவில் விமானம் அமைந்த ஜகதாம்பிகை உடன்உறையும், கரிக்குருவிக்கு முத்தியளித்த திருவலிதாயநாதரே.....சிவசங்கரா
* திருமுல்லை வாசலிலே பாலாறு தீர்த்தகரைதனிலே முல்லைக்கொடியின் இடையில் தோன்றிய கொடியிடைநாயகி உடன்உறையும் வாளால் வெட்டப்பட்டாலும் மாசில்லாத மாசிலாமணி ஈஸ்வரரே...... சிவசங்கரா
* திருமயிலாப்பூர் பதியினிலே கபாலி தீர்த்தக்கரைதனிலே கற்பகாம்பாள் உடன்உறையும் எலும்பை பூம்பாவையாக்கிய கபாலிசுவரரே....... சிவசங்கரா
* திருக்கழுக்குன்றத்திலே சம்பாதி தீர்த்தக்கரைதனிலே சொக்கநாயகி அம்மை உடன்உறையும், கழுகுகள் பேறுபெற்ற வேதகிரிஸ்வரரே.... சிவசங்கரா
* திரு அச்சிறு பாக்கம் பதியினிலே தேவதீர்த்தக் கரைதனிலே பாலாம்பிகை உடன்உறையும் ஆட்சீசரே........ சிவசங்கரா
* திருவேட்களம் பதியினிலே கிருபா கடாட்ச தீர்த்தக் கரைதனிலே சற்குணாம்பாள் உடன்உறைந்து அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கிய பாசுபதேஸ்வரரே...... சிவசங்கரா
* திருநெல்வாயில் என்னும் சிவபுரிபதியினிலே கிருபாசமுத்திரக் கரை தனிலே கனகாம்பிகை உடன்உறைந்து சம்பந்தருக்கும் அவருடன் சென்றவர்களுக்கும் அறுசுவை வழங்கிய உச்சிநாதரே.... சிவசங்கரா
* திருக்கழிப்பாலை கரைமேடு என்னும் பதியினிலே கொள்ளிட நதிக் கரைதனிலே வேதநாயகி உடன்உறையும் குதிரைக்குளம்பு பட்டுப் பிளந்தும் லிங்கமாக காட்சிதரும் பால்வண்ணநாதரே....... சிவசங்கரா
* திருப்பாதிரிபுலியூரினிலே சித்தராக வந்து விளையாடி கைவைத்து உதித்த சிவகரை தீர்த்தக்கரைதனிலே பெரியநாயகி உடன் உறைந்து நாவுக்கரசரை அப்பரேயென அழைத்த சிவக்கொழுத் தீசரே....... சிவசங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ திருவதிகை வீரட்டானத்திலே கெடிலநதிக் கரைதனிலே திரிபுர சுந்தரி உடன்உறையும், திரிபுரதகனம் நடத்திய வீரட்டேஸ் வரரே...... சிவசங்கரா
- ★ திருப்பெண்ணாடகத்தில் கயிலைத் தீர்த்தக் கரைதனிலே அழகிய காதலி உடன்உறையும் கருவறை சுற்றி பலகணியூடாக காணத்தரிசனம் தரும் பிரளயகாலேஸ்வரரே...... சிவசங்கரா
- ★ திருக்குடந்தைகாரோண கும்பகோண நகரிலே மகாமக தீர்த்தக் கரைதனிலே தேனார் மொழியாள் உடன்உறைந்து பிரம்மனுக் குப் படைத்தல் தொழிலை ஆரம்பித்த சோமேஸ்வரரே...... சிவசங்கரா
- ★ திருநாகேஸ்வரத்தினிலே கும்பகோணதலத்தில் மகாமக தீர்த்தக் கரைதனிலே பெரியநாயகி உடன்உறையும், நாகராஜன் பூசித்து வணங்கிய நாகேஸ்வரரே....... சிவசங்கரா
- ★ திருகுடமூக்கு கும்பகோண நகரிலே மகாமக தீர்த்த கரைதனிலே மங்களாம்பிகை உடன்உறையும் புண்ணிய தலங்களின் மண்ணிலே அமுதத்தோடு பிசைந்து உருவாகிய கும்பேஸ்வரரே....... சிவசங்கரா
- ★ திருஅறை அணி நல்லூர் பாறைகள் சூழ்ந்த பதியினிலே தென்பெண்ணை நதிக்கரையில் அழகிய பொன்னழகி உடன் உறைந்து பிரதோச நந்தி வலப்புறமும், அதிகாரநந்தி இடப்புறமும் சரிய நடுவில் காட்சி தரும் அதுல்யநாதேஸ்வரரே..... சிவசங்கரா
- ★ திருக்கோவலூர் வீரட்டானத்தலத்தினிலே சிவானந்தவல்லி உடன் உறைந்து அத்தகாசூரனை சங்காரம் செய்த வீரட்டானேஸ்வரரே...... சிவசங்கரா
- ★ திருக்காளத்தி விராட்புடுஷனுடைய விசுக்தி தானதலத்திலே பொன்முகலி ஆற்றங்கரைதனில் ஞானப்பூங்கோதை உடன் உறையும் வாயுத்தல மூர்த்தி குடும்பித் தேவரே.... சிவசங்கரா
- ★ திருக்கச்சி ஏகம்ப பிருதிவித் தலத்தினிலே கம்பாநதிக்கரை தனிலே ஏலவார்குழலி உடன்உறையும் சுந்தரருக்கு இடதுகண் அருளிய ஏகாம்பரநாதரே.......... சிவசங்கரா
- ★ திருப்பாசூர் நீர்நிலவளம் மிக்க சோலைகள் நிறைந்த சோழ தீர்த்தக் கரைதனிலே தங்காதலியம்மை உடன்உறையும் மூங்கில் வடிவில் உதித்த பாசூர் நாதரே...... சிவசங்கரா
- ★ திரு இலம்பையங்கோட்டூர் அரம்பையர்கள் வழிபட்ட தலத்தினி லே சந்திர தீர்த்தக்கரைதனிலே கனககுஜாம்பிகை உடன்உறை யும் எனதுரை தனதுரையாகப் பாடுவித்த அரம்பேசுவரரே....... சிவசங்கரா
- ★ திரு ஆலங்காடு பதியினிலே முத்தி தீர்த்தக் கரைதனில் வண்டார் குழலியம்மை உடன்உறையும் இரத்தினசபையில் ஊர்த்துவதாண்ட வம் ஆடும் தேவர் சிங்கபெருமானே...... சிவசங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✯ திருவேற்காடு விடம் தீண்டா பதி எனப் பெருமை பெற்ற தலத்தினிலே பாலி நதிகரைதனிலே பாலாம்பிகை உடன் உறையும், வெள்வேலமரமாக அருள்புரியும் வேதபுரிஸ்வரரே..... சிவசங்கரா
- ✯ திருவான்மியூரினிலே அமுதவால்மீகி தீர்த்தக்கரைதனில் திரிபுரசுந்தரி உடன்உறையும் தேவர்கள் அமுதமாக பூசித்த மருந்தீசுவரரே....... சிவசங்கரா
- ✯ முன்னேசுவரம் என்னும் இலங்கைத் திருநாட்டின் மாயவனாறு கரைதனில் வடிவாம்பிகை உடன்உறையும், உலகநன்மைக்காக சுயம்புவாக தோன்றிய முன்னைநாதரே...... சிவசங்கரா
- ✯ திருக்கேதீச்சரம் என்னும் சிவபூமிதனிலே பாலாவி தீர்த்தக்கரை தனிலே கௌரி அம்பாள் உடன்உறைந்து கேதுவினால் பூசிக்கப் பட்ட திருக்கேதீச்சர நாதரே..... சிவசங்கரா
- ✯ திருக்கோணமலை கோணேஸ்வரம் பதியினிலே பாவங்களைத் தீர்க்கும் பாவநாச தீர்த்தக்கரைதனிலே மாதுமை அம்பாள் உடன் உறைந்து ராவணன் போற்றிதுதித்த கோணேஸ்வர நாதரே......... சிவசங்கரா.
- ✯ திருத்தம்பலேஸ்வரம் என்றழைத்த நகுலேச்சரத்தில் கண்டகி (கீரிமலை) தீர்த்தக்கரைதனில் நகுலாம்பிகை உடன் உறையும் கீரிமுகம் மாற அருள் புரிந்த நகுலேஸ்வரரே........ சிவசங்கரா.
- ✯ கந்தளாய் விஜயராக சதுர்வேதி மங்கலபுரத்திலே கந்தளாய் குளத்தருகில் சதுர்வேத மங்கள நாயகி உடன் உறைந்து மன்னனுக்குப் பார்வைகொடுத்த சதுர்வேத மங்கள நாதரே...... சிவசங்கரா.

  கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரார் கொக்கட்டி சோலைகளின் நடுவிலே பார்வதி அம்மை உடன் உறையும் கல்நந்தி புல் உண்ண வைத்த தான்தோன்றிச்வரரே..... சிவசங்கரா.

இவை 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் யாத்திரை செய்து தரிசித்த தலங்கள்

**சித்தாந்தரத்தினம்**
**கிருஸ்ணானந்தி இராஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புராணவித்தகர் திரு.மு.தியாகராசா அவர்கள்
22.02.2015 இல் சிவபதமடைந்தமை குறித்து
அன்னாரின் நினைவாக வெளியிடப்பட்ட கவிதை**

## நெஞ்சம் மறக்கவில்லை

பரமனைப் போற்றிப் பழுதின்றி வாழ்ந்து
தரமான சாத்திரம் தேடிப் படித்து
அழகு நடையி லனைவரு மறியப்
பிழையின்றிப் புராண படனமும் செய்தாய்
கன்னித் தமிழைக் கண்ணெனக் கருதி
உன்னதத் தமிழ்வாழ் உயர்தமிழ்ச் சங்கத்தே
கொழும்பு நகரில் கேண்மை யோடு
வழுவின்றி வன்மையாய் வழங்கிய பேச்சால்
நானில மக்களும் நாடி வந்தே
பேணி உந்தன் பேச்சை மெச்ச
ஓயா தென்று மோங்கிடத் தமிழை
வாயாற் புகழ்ந்து வளமும் சேர்த்தீர்
வள்ளி திருமணம் விளக்கமாய்ப் படிக்கக்
கொள்ளை கொண்டே கருத்தொடு சிறுநூல்
கந்த புராணத்திற் கடைந்து செய்தாய்
சுந்தரத் தமிழைச் சுவைத்திட வன்றோ
பித்தனைப் போலப் பிடித்திருபத் தைந்து
வித்துவத் திறத்தால் விளங்கு கலித்தொகையில்
இலகு நடையி லிற்றினாய் உரையொடு
இலக்கிய உலகமு மின்பம் காணவே
புறநா னூற்றில் புரிந்து சிலபா
மற்றவ ரறிய மனமுடன் விளக்கி
யாக்கிய பெருமையு மவனியி லென்றும்
ஊக்கம் கொடுக்குமே உயர்தமிழ் வளர
நல்லன செய்து நன்றாய் வாழ்ந்தீர்
வல்லவா உந்தன் வடிவை நினைக்க
நீறு பூசிய நெற்றி யோடு
வீறு நடையுடன் வந்திடு வீரே
சிவனை நினைந்து சிறப்புடன் பூசை
சிவராத் திரியிற் சிவத்திரு மன்றில்
செய்ததும் கண்டோம் சிறந்த தலைவா
செய்வன திருத்தமாய்ச் செய்ததும் கண்டோம்
மானில மேங்க மண்ணக வாழ்வை
வீணெனக் கருதி விரைந்து சென்றோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணவ ருலகிலும் விடிவிளக் காய்நீர்
கண்ணெனத் திகழ்வாய் கருதிச் சொன்னோம்
தில்லைக் கூத்தன் திருவரு ளாலே
எல்லையி லின்ப மென்றும் காணச்
சைவ நீதிச் சஞ்சிகை யினரும்
சேவடி போற்றிச் சிரந்தாழ்த் தினரே

பாவாக்கம்
**சித்தாந்தரத்தினம்**
**செல்வி. வ. தேவராணி**

## திருமந்திர விளக்கம்

### புலால் மறுத்தல் (புலால் உண்ணாமை)

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே**

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை:-**
பொல்லாததாகிய புலால் உணவை உண்ணும் கீழ் மக்களை,
**எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்:-**
எல்லோரும் காணும் வண்ணம் இயம தூதர்கள்
**செல்லாகப் பற்றி:-**
கறையானைப் போன்று பற்றி அரித்து
**தீவாய் நரகத்தில் மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே:-**
அனல் கக்குகின்ற நரகத்தில் முதுகைக் கீழ்ப்புறமாகக் கிடத்தி வைத்து வருத்துவர்.
**பொல்லாப்புலால்:-** உயிரைத் துன்புறுத்திக் கொடுமைப்படுத்திப் பெறும் அதன் உடல் பொல்லாத புலால் ஆகும்.
**புலையர்:-** புலாலை உண்போர் புலையர்.

நாம் புலையர் என ஒரு சாதியினரை மட்டும் ஒதுக்கி வைக்கின்றோம். புலாலை உண்பவர் யாவரும் புலையரே. ஆதலால் புலால் உண்போர் எத்தனை செல்வம் செல்வாக்கு, அதிகாரம் உடையவராயினும் அவர்கள் இழிந்தவரே யாவர்.

**சைவப்புலவர் சு. செல்லத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரடா நீ?

சிவயோக சுவாமிகளுக்குக் குருவாக அமைந்தவர் செல்லப்பா சுவாமிகள். நல்லூர்க் கந்தனின் தேரடியில் இருந்த செல்லப்பர் யோகரைக் கண்டதும், "ஆரடா நீ" என்று அதட்டினார். முதற் பார்வையிலேயே யோகரின் உள்ளத்தில் இடம் பெற்றார்.

சதாசிவம் என்னும் இயற்பெயர் கொண்ட யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளைக் காணமுன்பே ஆன்மீக வளர்ச்சி பெற்றிருந்தார். இல்லையானால் விசரனைப் போல் பிறரால் காணப்பட்ட செல்லப்பரை உயர்ந்த ஞானியாக யோகர் கண்டிருக்க மாட்டார். ஞான ஒளி வீசும் குருவாக அவரைத் தான் கண்டு போற்றியதாக அவரே கூறுகின்றார்.

**கருத்தில் நினைந்துருகி கைகூப்பும் தொண்டர்**
**வருத்தமெலாம் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்**
**தேரடியில் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்**
**ஆரடா நீயென்றான் அவன்.**

உள்ளமுருகித் தொழுபவரின் வருத்தத்தைத் தீர்ப்பவன் வடிவேலன். அவன் அருளாட்சி செய்யும் நல்லூர்த் திருக்கோயிலின் தேரடியில் செல்லப்பா சுவாமிகளை யோகர் கண்டார். கண்டவருக்கு அவர் மெஞ்ஞானி என்பது தெளிவாகியது. அவரைத் தேசிகன் எனக் கொண்டு தரிசித்ததாகக் கூறுகின்றார். (தேசு – ஒளி, தேசிகன் - ஞான ஒளியானவன், குரு)

உலகியல் வாழ்வில் உழலும் எம்போன்றவர் ஐம்புலன்களின் வழி சென்றுஅல்லற்படுகிறோம். காடுகளில் திரிந்து வேட்டையாடும் வேடர்கள் போல் எமது புலன்கள் இன்ப இரை தேடி அலைகின்றன. அவற்றில் நாமும் ஒருவராகச் சென்று அலைகின்றோம். இங்ஙனம் அலைவது எமது தன்மையல்ல. நாம் புலன்களில் வேறானவர்கள். இவற்றை நாம் அறிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையை மாற்றி, நாம் இறைவனைச் சேர்ந்து இன்புற வேண்டியவர்கள் என்பதை, பக்குவம் வந்தபோது, இறைவனே உணர்த்துகிறான். அவன் உள்ளிருந்து உணர்த்துவதுமுண்டு குரு மூலம் உணர்த்துவதுமுண்டு. இது முன் செய்த தவத்தின் பலனாக நிகழ்வது. சைவசித்தாந்தத்தின் முதன்மை நூலான **சிவஞானபோதம்** இதனை விளக்குகிறது.

செல்லப்பா சுவாமிகளை யோகர் சுவாமிகள் சந்தித்தது முன்செய் தவத்தால் நேர்ந்தது. சந்தித்ததும் 'ஆரடா நீ?' என்று செல்லப்பர் அதட்டிக் கேட்ட ஒலி குரு மொழியாக அமைந்தது. யோகரின் உள்ளத்தை ஊடுருவி ஆத்மாவைத் தொட்டது. அரும்பாக இருந்த ஆத்மஞானம் முகையாகி மொட்டாகி இதழவிழத் தொடங்கியது.

சிந்தனை அலைகள் அகத்தில் மோதின. நான் யார்? போன்ற கேள்விகள் எழுந்தன.

குருவுருவும் குருபெயரும் குருவார்த்தையும் குருசிந்தனையும் தெளிவைத் தருவன. குருவாக வந்த செல்லப்பா சுவாமிகளால் யோகர் சுவாமிகள் தெளிவு பெற்றார்.

**'தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு திருவுரு சிந்தித்தல் தானே'.** – திருமந்திரம்

தான் யார் என்று தனக்கு அறியத் தந்தவர் தனது குருநாதன் என்று யோகர் சுவாமிகள் தனது 'நற்சிந்தனை' நூலின் தொடக்கத்திலே கூறுகிறார்.

**'என்னையெனக் கறிவித்தான் எங்கள்குரு நாதன்'**

இவ்வாறு கூறும் யோகர் சுவாமிகள் 'நான் யார்?' என்ற வினாவுக்கு அவர் அறிந்த விடையையும் சொல்கிறார். அவர் கைப்பட எழுதிய இந்த விடை நற்சிந்தனையிலே உள்ளது. அது வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாகப் பதியக்கடவது'.

கண் முதலிய பொறிகளின் வாயிலாகக் கண்ட ஒன்றை மனம் பற்றிக் கொள்கிறது. பற்றிக் கொண்ட பொருளை இன்னது என்று புத்தி நிச்சயிக்கிறது. நிச்சயிக்கப்பட்ட பொருளை சித்தம் சிந்திக்கிறது. மனமே செயல் முறையால் மனம், புத்தி, சித்தம் எனப் பெயர் பெறுகிறது. இவை வேறு, ஆன்மா வேறு. இது சைவசித்தாந்தத்தில் காணும் கருத்து. ஆன்மா இவற்றின் கூட்டென்றோ இவற்றில் ஒன்றென்றோ சிலர் தவறாகக் கருதுவதுண்டு. யாழ்ப்பாணத்துச் சைவபாரம்பரியத்தில் வந்த யோகர் சுவாமியும் இதனை உணர்த்தி ஆன்மாவுக்கு அழிவில்லை என்கிறார்.

ஆன்மா தனிப்பொருள் என்று உணர்த்தும் யோகர் சுவாமிகள் 'கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளார்' எனவும் கூறுகிறார். 'நான் சிவமே' என்று எண்ணும் பாவனை சிவோகம் பாவனை எனப்படும். இப்பாவனை ஆன்மீக சாதனைக்கு இன்றியமையாத ஒன்றாகும். இது தனக்கு இயல்பானது என்றும் அவர் குறிப்பிடுகிறார். இங்ஙனம் உரைத்து ஆன்மா வேறு இறைவன் வேறு என்பதையும் உணர்த்துகிறார். இவை போன்ற பலவற்றை நற்சிந்தனையில் பார்க்கலாம்.

இவற்றுக்கெல்லாம் மூலமாக அமைந்தது யோகர் சுவாமிகளின் உள்ளத்தில் பதிந்த செல்லப்பா சுவாமிகளின் 'யாரடா நீ' என்ற கேள்வியும் அதனால் மலர்ந்த மெஞ்ஞானமும் என்பது சிந்தனைக்குரியது.

**சித்தாந்தரத்தினம், கலாநிதி**
**க. கணேசலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர்களின் அனுபவ ஞானம்

“என்றும் எனது முழுமுதலே! புல்லாகி – பூடாகி, புழுவாய் - மனிதராய், முனிவராய் - தேவராய் எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன். மெய்யே உன் பொன் அடிகள் கண்டிற்று வீடுற்றேன்.” இது மணிவாசகர் தந்த அனுபவ அருள்வாக்கு. திருவாசகத்தேன் தந்த மணிவாசகர் இறை அருளாளர் என்பதை நாம் அறிவோம். அவர் திருவாயால் மலர்ந்த திருவாசகம் எமக்கு என்றும் பக்தி, அன்பு, இறைஞானம் வழங்கும் வற்றாத அருள் மழை பொழியும் ஊற்றாக அமைந்துள்ளது.

உளவாரத் தொண்டு செய்தே அப்பன் புகழ் போற்றி “தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்” என்று பாடி இறை நம்பிக்கையாளராய் வைராக்கிய பக்தி கொண்டு பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் கைலாசக் காட்சியும் கண்டு உள்ளம் குளிர்ந்தார் அப்பர் சுவாமிகள்.

ஞானப்பால் உண்டு தமிழ் பாடி சிவ ஜோதியில் மணவாளக் கோலத்தில் தொண்டருடன் கலந்தார் ஞானசம்பந்தர்.

வாது செய்தே தொண்டு செய்து வன்தொண்டனாய் பெயர் பெற்று வண்ணத் தமிழ் வாழ்த்துக்கள் ஈசன் மேல் பாடி, எமக்கு பதிகங்கள் பல தந்து வெள்ளை யானையில் தேவர்கள் புடைசூழ கயிலையில் ஈசன் பதம் சென்றடைந்தார் சுந்தரர்.

உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்கு அரியவனை, பிறைச் சந்திரனையும் வற்றாத கங்கையையும் சடையில் வைத்த எம் இறைவனை, ஜோதி வடிவான விண்ணவர் தலைவனை, சித் ஆகாச வெளியில் திருநடம் செய்யும் அப்பனின் சிலம்பொலி செய்யும் தூக்கிய இடக்காலினை பற்றி சிவபதம் அடையுங்கள் என்று சொல்லி பெரியபுராணம் தந்தார் சேக்கிழார் பெருமான்.

இடையன் உடலில் இடம் கொண்டு மூவாயிரம் தமிழ் மந்திரம் தந்த தெய்வத் திருமூலர் “வானுக்குள் ஈசனை தேடும் மதியிலீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே'' என்று திருமந்திரமாய் தமிழ் தந்தார்.

எங்கள் சமகாலத்தில் வாழ்ந்த சித்தர் சிவயோக சுவாமிகள் "அஞ்செழுத்தாலே அனைத்தும் ஆயின, அன்பே கடவுள், அன்பே உலகம், அன்பே உயிர்கள், அன்பே அனைத்தும்'' என்று கூறி "ஆதியும் அந்தமும் இல்லா ஒருவனை ஆதியின் அருள் கொண்டு அறிவதே அல்லால் ஓதி உணர்ந்தவர் ஒருவரும் இல்லை'' என்று குரு மொழியாய் கூறியுள்ளார்.

இது போன்ற எத்தனையோ அனுபவ மொழிகளை எமது அருளாளர்கள், சித்தர்கள், யோகிகள், ஞானிகள், கருணை ஊற்றுக்களாய் இருந்து கூறி இருப்பது கலியுகத்தில் மனிதர்களாய் வாழும் எங்களுக்காகவே. இவையெல்லாம் எமக்கு கிடைத்த பெரும் செல்வம். முக்காலமும் உணர்ந்த நிறை ஞானிகளாய் இருந்து முழுவதையும் வைத்துப் போயிருப்பது எமக்கு மட்டுமே.

இந்த உடல் நமக்கு கிடைத்திருப்பது காலையில் மலர்ந்து மாலையில் வாடிப்போகும் பூப்போன்றது. இருக்கும் காலத்தில் நாம் வாழும் வாழ்க்கையின் நிகழ்வுகளும் அனுபவிக்கும் இன்பதுன்பங் களின் அனுபவங்களும் ஆளுக்கு ஆள் வேறுபடுகிறது. பக்தியும் தெய்வநம்பிக்கையும் நல்லவற்றையே எண்ணும், நல்லவற்றையே சொல்லும், நல்லவற்றையே செய்யும். இவையே மனித வாழ்க்கையின் நல்ல விளைவுகளாய் அமைந்து விடும்.

இதற்கெல்லாம் முதலில் நமது பிறப்பின் நோக்கம் எது என்பதை தெரிந்து தெளிவு கொள்ள வேண்டும். அதற்கான முதல் முயற்சி தான் பக்தி. கலியுகம் - பக்தியுகம் என்பதை மனதில் பதிக்க வேண்டும். கடவுள் நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று சொல்லி அளந்தவர்களும் நம்முடன் தான் வாழ்ந்தார்கள். நாச காலம் எம்மை வாட்டாதிருக்க பக்திமார்க்கம் ஒன்றே ஒரே வழி. இறை நாமத்தை நினையுங்கள், பாடுங்கள், கேளுங்கள், இறைபணி செய்யுங்கள் அன்பால் அனைத்து உயிர்களையும் நேசியுங்கள் மனித நேயத்தால் உள்ளத்தை நிறையுங்கள். நாம் நிறை மாந்தராய் வாழ்வோம். இறை வாழ்க்கையில் நல்லதையே நினைத்து நல்லவையே செய்வோம்.

உள்ளத் தெளிவு உயர் ஞானத்தை தரும். உயர்ந்தோர் வாக்கின் உண்மைகள் தெரியவரும். இறைஞானி சிவானந்தர் கூறியது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்பம் இறை கலப்பு" என்ற தெளிவு பிறந்து பயன் பெறுவோம். மன அமைதி பெறுவோம். பிறப்பின் பயனான பேரானந்தப் பெருவாழ்வில் பொருந்துவோம்.

ஆத்ம அநுபூதி பெற்ற எல்லாப் பேராசான்களும் இதே கருத்தை அனுபவ ஞானத்துடன் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இறைவனிடத்தில் இவர்கள் கொண்ட இணக்கம் பேரின்பத்தின் உச்ச வெளிப்பாடு. இதுவே உவமானங்களுக்கு அப்பால் அத்துவித நிலையின் ஒங்காரதத்துவ ஒருமைப்பாடு ஆகும்.

"தேடலை தெரிந்து, தேடி, தெளிந்து, கலந்து, களித்து உள்ளத்துள் ஒருமுகமாய் உள்வாங்கி உவகையுடன் பூரணத்தில் நிலைத்திரு"

**வாழ்க வளமுடன்**
**திரு. வே. தியாகராசா அவர்கள்**
**தலைவர், கொழும்பு திவ்ய ஜீவன சங்கம்.**

**அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 2015ஆம் ஆண்டு நடத்திய இளஞ்சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

1) திரு. இ தெய்வநாயகம் தயமுகன் - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
2) செல்வி. கனகரத்தினம் கனகதுர்க்கா – ஏழாலை, யாழ்ப்பாணம்.
3) திருமதி. அரியமலர் அருணகிரிநாதன் - கிரான், மட்டக்களப்பு.
4) திருமதி. வளர்மதி சுமாதரன் - கொழும்பு 06.
5) செல்வி. சின்னத்தம்பி கிரிசாந்தினி – வவுனியா.
6) திருமதி. சிவமோகனசுந்தரி சிவராஜா – மட்டக்களப்பு.
7) செல்வி. சௌந்தரராசா சஜீபா – வவுனியா.
8) செல்வி. கணேசமூர்த்தி மோகனஜெனனி - இணுவில், யாழ்ப்பாணம்.
9) செல்வி. மாரிமுத்து குகவாணி – வவுனியா
10) திரு. கணபதிப்பிள்ளை வெற்றிவேல் - மூதூர், திருகோணமலை.
11) செல்வி. முருகையா அம்பிகா - ஹப்புத்தளை, பதுளை.
12) திரு. சிவபாதம் மணிவண்ணன் - இணுவில், யாழ்ப்பாணம்.
13) திரு. சுவேந்திரராசா காசிராஜா – சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
14) திரு. சோமநாதன் மயில்வாகனம் - துறைநீலாவணை, மட்டக்களப்பு.
15) செல்வி. கோமகள் குமாரசாமி – சுழிபுரம், யாழ்ப்பாணம்.
16) செல்வி. திரவியராஜா சுபி – திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்

மன்மத வருடம் ஆடி மாதம்

| தமிழ் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| ஆடி 01 | 17.07.2015 | வெள்ளி | ஆடிப்பிறப்பு |
| 03 | 19.07.2015 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 06 | 22.07.2015 | புதன் | குமார சஷ்டி விரதம் |
| 07 | 23.07.2015 | வியாழன் | பெரும்மிழலைக் குறும்ப நாயனார் குருபூசை |
| 08 | 24.07.2015 | வெள்ளி | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சேரமான்பெருமாள் நாயனார் குருபூசை |
| 11 | 27.07.2015 | திங்கள் | கலியநாயனார் குருபூசை<br>கோட்புலி நாயனார் குருபூசை |
| 13 | 29.07.2015 | புதன் | பிரதோச விரதம் |
| 15 | 31.07.2015 | வெள்ளி | பூரணை விரதம் |
| 18 | 03.08.2015 | திங்கள் | சங்கடஹர<br>சதுர்த்தி விரதம் |
| 23 | 08.08.2015 | சனி | கார்த்திகை விரதம்,<br>மூர்த்தி நாயனார் குருபூசை,<br>புகழ்ச்சோழர் குருபூசை |
| 26 | 11.08.2015 | செவ்வாய் | கூற்றுவநாயனார் குருபூசை |
| 27 | 12.08.2015 | புதன் | பிரதோச விரதம் |
| 29 | 14.08.2015 | வெள்ளி | ஆடி அமாவாசை |
| 31 | 16.08.2015 | ஞாயிறு | ஆடிப்பூரம் |

மன்மத வருடம் ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| ஆவணி 01 | 18.08.2015 | செவ்வாய் | மாதப்பிறப்பு,<br>நாகசதுர்த்தி விரதம் |
| 02 | 19.08.2015 | புதன் | கருட பஞ்சமி |
| 03 | 20.08.2015 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| 06 | 23.08.2015 | ஞாயிறு | குலச்சிறை நாயனார் குருபூசை |
| 08 | 25.08.2015 | செவ்வாய் | ஆவணி மூலம்,<br>குங்கிலியக் கலய நாயனார் குருபூசை |
| 10 | 27.08.2015 | வியாழன் | பிரதோச விரதம் |
| 11 | 28.08.2015 | வெள்ளி | நடேசரபிஷேகம்,<br>ஆவணி ஓணம்,<br>வரலக்ஷ்மி விரதம் |
| 12 | 29.08.2015 | சனி | பூரணை விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 15 | 01.09.2015 | செவ்வாய் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 18 | 04.09.2015 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| 23 | 09.09.2015 | புதன் | செருத்துணை நாயனார் குருபூசை |
| 24 | 10.09.2015 | வியாழன் | பிரதோச விரதம்,<br>புகழ்த்துணை நாயனார் குருபூசை,<br>அதிபத்த நாயனார் குருபூசை |
| 25 | 11.09.2015 | வெள்ளி | இளையான்குடிமாற நாயனார் குருபூசை |
| 26 | 12.09.2015 | சனி | அமாவாசை விரதம் |
| 28 | 14.09.2015 | திங்கள் | மறைஞானசம்பந்தர் குருபூசை |
| 31 | 17.09.2015 | வியாழன் | விநாயக சதுர்த்தி விரதம் |

மன்மத வருடம் புரட்டாதி மாதம்

| | | | |
|---|---|---|---|
| புரட்டாதி 01 | 18.09.2015 | வெள்ளி | மாதப்பிறப்பு, ரிஷி பஞ்சமி |
| 02 | 19.09.2015 | சனி | ஷஷ்டி விரதம், புரட்டாதிசனி |
| 06 | 23.09.2015 | புதன் | ஏனாதிநாத நாயனார் குருபூசை |
| 08 | 25.09.2015 | வெள்ளி | பிரதோச விரதம் |
| 09 | 26.09.2015 | சனி | நடேசரபிஷேகம்,<br>புரட்டாதிச் சனி<br>நரசிங்க முனையரைய நாயனார் குருபூசை |
| 10 | 27.09.2015 | ஞாயிறு | பூரணை விரதம்,<br>உமாமகேஸ்வர விரதம் |
| 11 | 28.09.2015 | திங்கள் | மஹாளய பட்சாரம்பம் |
| 13 | 30.09.2015 | புதன் | உருத்திரபசுபதி நாயனார் குருபூசை |
| 14 | 01.10.2015 | வியாழன் | கார்த்திகை விரதம்.<br>சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 16 | 03.10.2015 | சனி | திருநாளைபோவார் நாயனார் குருபூசை,<br>புரட்டாதிச் சனி |
| 23 | 10.10.2015 | சனி | சனிப்பிரதோச விரதம்,<br>புரட்டாதிச் சனி,<br>அருணந்தி சிவாசாரியார் குருபூசை |
| 25 | 12.10.2015 | திங்கள் | அமாவாசை விரதம்<br>மஹாளய பட்ச முடிவு |
| 26 | 13.10.2015 | செவ்வாய் | நவராத்திரி விரதாரம்பம் |
| 29 | 16.10.2015 | வெள்ளி | சதுர்த்தி விரதம் |
| 30 | 17.10.2015 | சனி | புரட்டாதிச் சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவாவடுதுறை ஆதீனச்
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் - கொழும்பு
2014 - 2015



திருவாவடுதுறை ஆதீனச்
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் - கொழும்பு
2014 - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**Registered in the Postal Department of Sri Lanka under No. QD/172/News/2015**

இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்

Sharp Graphics (Pvt) Ltd. ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org